# <u>ADM COURT, SANKARANKOVIL</u>

**தேதி 15.03.2024**

**அசல் வழக்கு எண். 363/2015**

**<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் எனது மனைவிதான் வாதி என்றால் சரிதான். எனது மனைவிக்காக நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் முழுவதையும் நான்தான் எனது மனைவிக்கு நன்கொடை கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்களை பொறுத்து எனது மனைவி ஏற்கனவே ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கின் எண்.110/2011 என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.110/2011 ல் இந்த வழக்கு சொத்து அனைத்தும் ஆதியில் சங்கரபாண்டியருக்கு பாத்தியப்பட்டது என எனது மனைவி சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கில் வழக்கு சொத்து அனைத்தும் சங்கரபாண்டியருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் இறந்தபிறகு அவருடைய மக்களான திருமலைமுத்துதேவர், ராமசாமிதேவர் ஆகியோர் பாகம்பிரித்துக்கொண்டதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அதேபோல் அந்த பா கப்பிரிவினையில் இந்த வழக்கு சொத்து அனைத்தும்திருமலைமுத்துதேவர் பாகமாக ஒதுக்கப்பட்டு அதன்பின்பு அவருடைய வாரிசான கோமதியம்மாளுக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மேற்சொன்ன கோமதியம்மாள்தான் என் பெயருக்கு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். கோமதியம்மாள் என் பெயருக்கு எழுதிவைத்துள்ள உயில் ஆவணத்தில் சொத்து விபரம் இல்லை என்றால் சரிதான்.

2. இவ்வழக்கு பிரதிவாதி மேற்சொன்ன ராமசாமிதேவரின் மகள் என்றால் சரிதான் என் மனைவி ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.110/2011 வழக்கு முழுவிசாரணைக்குபிறகு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை எதிர்த்து எனது மனைவி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடும் விசாரணைக்கு பிறகு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து எனது மனைவி உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த இரண்டாவது மேல்முறையீடும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.110/2011 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அசல் வழக்கு எண்.110/2011 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அசல் வழககு எண்.110/2011 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் மேற்சொன்ன வழக்கில் இந்த வழக்கை சொத்தை பொறுத்து எனது மனைவி முன்வைத்துள்ள சங்கதிகள்தெரியவந்துவிடும் என்பதால் அதனை மறைப்பதற்காக அசல் வழககின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. அசல் வழக்கு எண்.110/2011 வழக்கு எந்த காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.110/2011 வழக்கில் மொத்தம் 9 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 9 அயிட்ட

சொத்துக்களை பொறுத்தும் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது மனைவி 8 அயிட்ட சொத்துக்களை பொறுத்துமட்டும்தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன முந்தைய வழக்கின் 9 வது அயிட்ட சொத்தை இந்த வழக்கில் காட்டவில்லை என்றால் சரிதான். முந்தைய வழக்கில் 9 வது அயிட்டமாக சர்வே எண்.339/2 உள்ள சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை இந்த வழக்கில் காட்டாததற்கு காரணம் உள்ளதா என்றால் அந்த சொத்து எங்கள்சொத்து இல்லை என்பதால் காட்டவில்லை. மேற்சொன்ன சர்வே எண்.339/2 ல் உள்ள சொத்துக்களையும், வேறு சில சொத்துக்களையும், கோமதியம்மாள் பிரதிவாதியின் கணவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன முன்வழக்கு எண்.110/2011 ல் பிரதிவாதியான இவ்வழக்கு பிரதிவாதி அந்த வழக்கில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் கோமதியம்மாள் பிரதிவாதியின் கணவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்று எதிர்வழக்காடி வந்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிலும் கோமதியம்மாள் தன்னுடைய சொத்துக்களை இந்த பிரதிவாதியின் கணவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4. இந்த வழக்கில் வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று சொல்கிறேன் என்றால் கோமதியம்மாள் மூலம் எனக்கு கிடைத்த சொத்து என்று சொல்கிறேன். வழக்கு சொத்து கோமதியம்மாளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் சர்வே எண்.190/4, 191/7, 223/4, 371/19 ஆகிய சொத்துக்கள் திருமலைமுத்து தேவருக்கு பாத்தியப்பட்டது. சர்வே எண்.339/3, 342/5, 335/3, 335/4 ஆகிய சொத்துக்கள் கோமதியம்மாளின் தந்தை முத்தையாதேவர் மற்றும் தாயார் முத்தாத்தாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் சங்கரபாண்டியதேவருக்கு பாத்தியப்பட்டு

அவருடைய வாரிசாக திருமலைமுத்துதேவருக்கு பாத்தியப்பட்ட அதன்பின்பு கோமதியம்மாளுக்கு கிடைத்த சொத்து என முன்வழக்கு எண்.110/2011 வழக்கில் வழக்காடிவிட்டு தற்போது அந்த சங்கதிகளை மறைத்து அதற்கு முரணாக வழக்கு சொத்துக்கள் கோமதியம்மாளின் தகப்பனாருடைய சொத்து என பொய்யாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து ஏற்கனவே முன்வழக்கில் தீர்மானித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதால் அச்சொத்தை பொறுத்து மீண்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டினால் தடை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன முன்வழக்கு எண்.110/2011 வழக்கில் வழக்கு சொத்தை பொறுத்து எனது மனைவி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி தாக்க்ல செய்யப்பட்டபோது வழக்கு சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், எனது மனைவிக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும் பிரதிவாதி அந்த வழக்கில் எதிர்வழக்காடி வந்ததால் தற்போது வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மனைவி பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**